# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

MSSRF

Science for Sustainable Development

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | இராமநாதபுரம் | காலம் : | 25/04/2018 | முதல் | 29/04/2018 |
| அறிக்கை எண் : | 032 /2018 | வெளியீட்டு நாள் : | 24/04/2018 | | |

| கடந்த கால வானிலை 20/04/2018 முதல் 23/04/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 35-36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 28 |
| மேக மூட்டம் | 2-4 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 68-82 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 8-13 |

எதிர்பார்க்கப்படும் வானிலை (29-04-2018 8.30 மணி வரை )

| காரணிகள் | 25-04-2018 | 26-04-2018 | 27-04-2018 | 28-04-2018 | 29-04-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 38 | 38 | 37 | 37 | 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 28 | 28 | 27 | 27 | 27 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 75 | 75 | 70 | 70 | 70 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 65 | 65 | 60 | 60 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

**குறுஞ்செய்தி :**

அடுத்த 5 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு இல்லை. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 கி.மீ வேகத்தில் தென்கிழக்கு மற்றும் தெற்கு திசைகளில் காற்று வீசக் கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : மல்லிகை & ( கால்நடை )**

தற்போது நிலவும் வறண்ட வெப்பமான வானிலையில் மல்லிகை பூப்பயிரில் இலைச்சேர்க்கும் புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதன்புழுக்கள், இலைகளையும், கிளைகளையும் ஒன்றாக பிணைத்துவிடும். பிணைக்கப்பட்ட இலைகளை அரித்துத் தின்பதால் அவை சல்லடைபோல் ஆகியிருக்கும். தாக்கப்பட்ட செடிகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கலாம். விளக்குப்பொறி அமைத்தும் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். மேலும் வேப்பங்கொட்டை வடிநீர் 5 சதம் அல்லது 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி மாலத்தியான் கலந்து தெளித்தும் கட்டுப்படுத்தலாம். செடிகளை சீரான கவாத்து செய்து, தோட்டத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளவும்.

வெயில் காலங்களில், வறண்ட குளம் மற்றும் குட்டைகளில் தேங்கியுள்ள அசுத்தமான தண்ணீரில் உள்ள நத்தைகள், கிருமிகள் மற்றும் புழுக்கள் மூலம் கால்நடைகளை நோய் தாக்கக்கூடும். எனவே விவசாயிகள் தங்கள் கால்நடைகள் தண்ணீர் வற்றியுள்ள குளம் குட்டைளில் தண்ணீர் குடிக்க வைப்பதை தவிர்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.